Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞூ (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞூ ஆவணிமீ உஅஉ வெள்ளிக்கிழமை (13 September. 1963) [இல-உ ...

## திருவிழாக்களில் இன்று சிற்றின்பப் பாடல்களா

### வைதிக சைவம் வளர்த்த அம்பலவாண நாவலர்

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற [8-9-63] அருட்டிரு அம்பலவாணநாவலர் அவர்களின் நினைவு விழாவில் பண்டிதர் சோ. இளமுருகனர் பேசிய பேச்சின் சுருக்கம்.

சைவத் திருநெறி நிலை தளர்ந்து வளர்ச்சி குன்றி அல்லற்படுங் காலங்களிலே, அருட்சான்றோர் தோன்றி, அதனை முன்போல நிறுத்தி, அது கூறும் உண்மைகளை உலகுக்குக் காட்டித் தெய்வ ஒளியைச் சுடர்விடச் செய்வர்.

பௌத்த சமயம் சைவத்தை நிலைதளரச் செய்தகாலத்திலே மணிவாசகப்பெருமான் தோன்றிச் சைவத்தை நிலைபெறச் செய்தார். சமணசமயம் சைவத்தை விழுங்கிய காலத்திலே திருஞானசம்பந்தப் பெருமானும் அப்பர் பெருமானுந் தோன்றிச் சைவத்தை நிலைபெறச்செய்தார்கள். வேதாந்த மாயாவாதம் எழுந்த காலத்திலே மெய்கண்டதேவர் தோன்றிச் சைவ சித்தாந்தத் திருநெறியின் கோட்பாட்டை நிலைநாட்டினர்.

குறித்த சமயம் சைவத்தை மறைக்கத் தொடங்கியகாலத்திலே நாவலர் பெருமான் தோன்றிச் சைவத்தை நிலைபெறச் செய்தார்கள்.

அவர் சென்ற அடிச்சுவட்டிலே அம்பலவாண நாவலர் அவர்களும் சென்று தமது போதனையாலும் சாதனையாலும் சிறந்த சைவத் தொண்டுகள் செய்தார்.

ஆரியமுஞ் செந் தமிழும் சைவத்துக்கு இரண்டு கண்கள். இரு மொழிகளிலும் சைவத்துக்குரிய பிரமாண நூல்கள் இருக்கின்றன வடமொழி வேதங்கள் பொது நூல்கள், வடமொழி ஆகமங்கள் சைவசித்தாந்தத்தை விளக்குஞ் சிறப்பு நூல்கள். பன்னிரு திருமுறைகளும் வடமொழி வேதங்களையும் ஆகமங்களையும் உடன்படுகின்றன. அத்திருமுறைகள் செம்பொருட் சிவத்தை 'அவனருளாற்கண்டு' அநுபவித்த அநுபவ நூல்கள். அவைகள் சைவக் கருவூலங்கள். ஆக்கம் பயக்கும் அருள் மந்திரங்கள். வடமொழியிலுள்ள பல்வேறு வகைப்பட்ட மந்திரங்களும் இத் தமிழ் மந்திரங்களும் எம்மைத் தூய்மை செய்து சிவ வாழ்வில் வைகுவிக்கும் அருளொளிகள்.

தமிழ் மந்திரங்களிற் கொண்ட பற்றினுல் வடமொழி மந்திரங்களை நீக்கி விடுதல் வேண்டும் என்னும் கொள்கை அரசியற் பூசலினுல் எழுந்த விதண்டா வாதமாகும்.

வைதிக சைவத் திருநெறிக்கு இரண்டும் பெருநிதியங்கள், சிவமாந் தன்மையெய்துதற்கு உரிய அறிவொளியைத் தருவனவே பதினுன்கு சாத்திரங்கள்,

அம்பலவாண நாவலர் பவுட்கராகமத்தை அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார்கள். அதனுல் வைதிக சைவம் வளர வழிசெய்தார். நாவலர் பெருமானைத் தமது அருட் குருவாகக் கொண்டு தமது வணக்கத்துக்குரிய தாய்ச் சற்குரு மணிமாலை என்னும் நூலை யாத்தருளினர் அந் நூலிலே சைவ சித்தாந்தக் கருத்துக்கள் ஆங்காங்கே மிளிர்கின்றன.

இந்நாளிலே நாவலர்பெருமானும், அம்பலவாண நாவலரும் இருந்தால் பல பொய்

யான செறிகளைத் திருத்தி உண்மைகளை நிலை நாட்டிச் சைவத்தைப் பேணுவர்",

சைவத்தின் பெயர் இந்து ஆக மாறியதை நாவலர்கள் இருந்தாற் பொறுக்கமாட்டார்கள்! பொதுச் சமயம் என்னும் ஒன்றை உருவாக்கிச் சைவத்திருநெறியை உருக்குலைத்துச் சைவ மக்களைச் சமயப் பற்று இல்லாதாராக்கிவிடுதற்கு இந்த நாட்டிலே சிலருடைய முயற்சி வேர் கொள்ளப் பார்க்கின்றது. அக்கொடிய கொள்கையைச் சைவப் பொதுமக்கள் தலைநிமிர்ந்து ஒருமுகமாய் நின்று எதிர்க்க வேண்டும். சைவத்துக்குத் தாமே தூண் என்றிருக்கின்ற ஒரு சிலர் அந்த மாய வலையிலே சிக்கிக் கொண்டார்கள். அதனுல் அவர்கள் துரியநிலை கண்ட மவுனிகளாய் யாதும் பேசாது வாளா இருக்கின்றுர்கள். பொதுச் சமயக் கொள்கையைச் சைவ சமயப் பிரமாண நூல்கள் யாண்டுங் கூறவில்லை. சைவ சமய குரவர்கள் யாண்டுங் கூறிற்றிலர், நாவலர்பெருமான் எங்காயினும் கூறினர் அல்லர். அக்கொள்கை வெறும் விதண்டா வாதப் பித்தலாட்டம்! அதனை ஒழித்துக்கட்டுவது சைவப் பொதுமக்கள் கடனுகும்.

**கரும்பிருக்க - இரும்பை மெல்லும் முயற்சி ஏன்?**

இனிச் சைவக் கோயில்களிலே கூட்டுப் பிரார்த்தனைக்கு மிக வாய்ப்பான பன்னிரு திருமுறைகளில் வரும் அருட் பாடல்கள் இருக்கவும் அவற்றை விடுத்துக் கன்னடத் தென்னுப் பாட்டுக்களையும், மாயாவாத வேதாந்த சமயத்தார் பாடிய மருட்பாடல்களையும் பாடி வருவது கரும்பிருக்க இரும்பை மென்றதற்குச் சமமன்றே! அன்றியும், சிற்றின்பத்தை அடியீடாகக் கொண்டு கொடுந்தமிழிற் பாடிய திரைப்படப் பாடல்களைத் திருவிழாக்காலங்களிலே ஒலிபெருக்கி வாயிலாகப் பாடச்செய்து தொண்டர்களின் மனத்தை வேறுபடுத்துவது அறக்கொடிய தீச்செயலாம்.

இவைகளை ஆண்மையுடன் எதிர்த்துத் திருத்தி உண்மைச் சைவ சீலங்களை மீண்டும் நிலைநாட்ட நாவலர் பெருமான் வாராரோ!!

—:—

## நற் சிந்தனை

—:—

ஓமெனு மெழுத்தினுள்ளே
ஒளியதாய் விளங்குகின்ற
சோமசுந் தரத்தின்
அடிதொழுவ தெக்காலம்.

## சுதுமலை இந்துசமய விருத்திச் சங்கம்

சுதுமலை இந்துசமய விருத்திச் சங்க ஆதரவில், சுதுமலை சிவன் கோவிலில் பெரிய புராணம் படிக்கப்பட்டு முடிவடைந்ததையொட்டி இன்று காலை 9 மணியிலிருந்து அக்கோயிலில் சங்காபிடேகம் நடைபெறும். தொடர்ந்து பிற்பகல் 4 மணி தொடக்கம் சுவாமி ஊர்வலமாய் கூளாவடி வழியாக மூத்தநயினர் கோவிலுக்குச் சென்று திருக்குளத்தடியில் முதலைவாய்ப் பிள்ளையை மீட்டபகுதி படித்தலும், திரும்பி வரும்போது சங்கரப்பிள்ளை வீதி வழியாக வந்து இணுவில் மானிப்பாய் றேட்டு வழியாக ஈஞ்சிலோடைக் கூடாகச் சென்று சுவாமி சந்நிதானத்தை அடைதலும் நிகழும்.

14 9-63 சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மேற்படி பெருமானுக்கு விசேஷ அபிஷேகமும் புராணங்காப்புக்கட்டுதலும் நடைபெற்று 11 மணிமுதல் அறுபத்துமூவர் குருபூசையும் அன்னதானமும் நிகழும்.

பி.ப. 6 மணிக்கு "சேக்கிழார்" என்னும் பொருள்பற்றி பண்டிதர் எம், கந்தையா பி. ஏ, மா. இ. க. அவர்களும் இன்னும் பலரும் சொற்பொழிவாற்றுவர்.

———

முந்தைகாண் மூவரினும் முதலா னன்காண்
மூவிலைவேல் மூர்த்திகாண் முருக வேட்குத்
தந்தைகாண் தண்கடமா முகத்தி னற்குத்
தாதைகாண் தாழ்ந்தடியே வணங்கு வார்க்குச்
சிந்தைகாண் சிந்தாத சித்தத் தார்க்குச்
சிவனவன்காண் செங்கண்மால் விடையோன் றேறும்
எந்தைகாண் எழிலாரும் பொழிலார் கச்சி
ஏகம்பன்காண் அவனென் எண்ணத் தானே,

x x x

நன்மைபெருகு அருள்நெறியே வந்தணைந்து நல்லூரில்
மன்னுதிருத் தொண்டனர் வணங்கி மகிழ்ந்தெழும்பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றேம் என்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினன் சிவபெருமான்.

## மிருதங்கக்கலைஞருக்குப் பாராட்டு

———

"இந்தியாவில் பல இசைக் கலைஞர்கள் வாழ்ந்ததுபோல நமது இழநாட்டிலும் விசேடமாக யாழ்ப்பாணத்திலும் பல கலைஞர்கள் வாழ்ந்தார்கள், இப்பொழுதும் பல இசைக்கலைஞர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறுர்கள், தாள வாத்தியமாகிய மிருதங்க இசையில், மரபு தவருமல் தற்போது இசையை வளர்த்து வருபவர்கள் திருவாளர் எம், என். செல்வத்துரை அவர்களாவர். திரு, செல்வத்துரை அவர்கள் பல இளம் மிருதங்க வித்துவான்களை நமக்கு அளித்துள்ளார்கள்" என்று உரும்பராய் கருணுகரப்பிள்ளையார்கோவில் தீர்த்தோற்சவ தினத்தன்று பிரபல மிருதங்க வித்துவான் எம். என். செல்வத்துரை அவர்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் கூறினர்,

திருவாளர் எம். என். செல்வத்துரை அவர்கள் நீடூழி காலம் வாழ்ந்து மிருதங்க இசைக்கலையை வளர்க்க வேண்டுமென்று திரு. மு, பசுபதி அவர்கள் வாழ்த்தி செல்வத்துரை அவர்களுக்குப் பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்.

அருட்கவி ஆசிரியர் சீ, விநாசித்தம்பி அவர்கள் செல்வத்துரை அவர்களது மேதா விலாசத்தைப் பாராட்டினர். எம். என். செல்வத்துரை அவர்கள் நன்றி தெரிவித்துப் பேசினர்.

ஈற்றில் திரு. செல்வத்துரை அவர்களது மாணவர்களான ஆத்மானந்தா, சுகானந்தா, ஸ்ரீகாந்தா, மோகனச்சந்திரா ஆகியோரின் மிருதங்க தாள வாத்தியக் கச்சேரி, வயலின் வித்துவான் பிரமஸ்ரீ. எஸ். வைத்தீஸ்வர ஐயரவர்களது பாடலுடன் ஆரம்பமாகி நீண்ட நேரம் நடைபெற்றது. மிருதங்கம் வாசித்த சிறுவர்கள் சபையாரின் பாராட்டுதலைப் பெரிதும் பெற்ருர்கள்,

———

## ஆண்டியாக பயில்பவனே!

★

### "அளவையூர் - சஞ்சீவி"

இராகம் : பேகட :: தாளம் : ரூபகம்

பல்லவி

பழம் நீ — தெய்வப் (நல்லூர்ப்)
பரம ஞானப் பழம்பொருள் நீ (ப)

அநுபல்லவி

பழனிமலையில் ஆண்டியாக
பயில் பவனே பால யோக (ப)

சரணம்

அன்பர் வேண்ட அருட் குருவாய்
அறிய வொண்ணு அருவுருவாய்
இன்பம் புக்கும் எழிற் றுருவாய்
ஏறு மயிலில் ஏறி வருவாய். (ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஸு ஆவணி மீ
உஅஉ வெள்ளிக்கிழமை

## வருவாய் மிக்க வடபகுதிச் சேவை— ஆனால் வசதியீனம்!

இருப்பதற் கிடமில்லை நின்றுகொண்டு நெடும் பயணம் செய்ய வேண்டிய நெருக்கடி. இவ்வகையிற காணப்பெறுகின்றது கொழும்பு மாநகருக்கும் காங்கேசன்றுறைக்கும இடையிலே தண்டவாள இயந்திரப் போக்குவரத்துச் சேவை. புகைவண்டி என்றழைக்கப்பட்ட காலம அதாவது நீராவியால் இயங்கிக் கரிப் புகையை மேமேலே வீசிய வண்ணம் சென்றுகொண்டிருந்த வண்டிகளின் காலம கழிந்துவிட்டது கடுகதி இயந்திரச் சேவைக் காலமாம இவ்வேளையில் உத்தர தேவியும் யாழ்தேவியும் ஓடிய வண்ணமிருக்கின்றன. காலையிலும் மாலையிலும் வேறு வண்டிகள் சேவை செய்கின்றன. இருந்தும இடமில்லாத நெருக்கடி ஏன் இருக்க வேண்டும்.

நூற்றுக் கணக்காகப் பயணஞ்செய்வோரின் எண்தொகை ஆயிரக்கணக்காக மாறிவிட்டால் அதற்குத் தக்க சேவையை அமைக்கும்பொறுப்பு யாருடையது! வருவாய் இல்லாத சேவையென்று ஒருவாறுகாரணம் காட்டி விடலாமென்று அரசினர் கருதமாட்டார். வெள்ளிடை மலைபோல விளங்குகின்றது குன்றுபோற் குவியும் வடபகுதி வருவாய்.

ஆகவே பணம் கொடுத்துப் பயணம் செய்கின்றவர்கள் நெடுந்தூரம் செல்வது வசதியற்றதாயிருப்பது தகாது. இரவில் இத்தகைய சேவை போதும் பகலிலே கடுகதிப் பயண வண்டிகள் கூடுதலாக ஓடுதல் ஒருவழி. காங்கேசன்றுறையிலிருந்து அதிகாலையில் ஐந்துமணிக்கும் அதற்குப் பின் ஆறரை மணிக்கும் பிற்பகல் ஒரு மணிக்கும மாலை ஆறரைமணிக்கும இப்பொழுது இச்சேவை நடைபெறுகிறது. இடையிலே இன்னும் இரண்டுமுறை அதாவது முற்பகல் பத்து மணிக்கும் பிற்பகல் நாலு மணிக்கும் வண்டிகள் சென்றால் வசதியின்மை குறையும்.

அவ்வாறு சேவையைக் கூட்டுவதோடு வகுப்பற்ற சேவை முறையைக் கொணர்ந்து விடுதலே வசதியின்மையை மாற்றுவதற்குகந்த வழி. முதலாம் இரண்டாம் மூன்றும வகுப்புகளுடன் தலையணைமீது கவலையின்றி நித்திரை செய்து உல்லாசப் பயணஞ் செய்வோர் வகுப்பும் ஒன்று உண்டு. இவர்களே பயணஞ் செய்வோரில் நூற்றுக்கு ஐம்பதுக்கு மேலானவர்கள். ஒரு சாரார் உண்டு களியாடி உறங்கி வசதி வளத்துடன் பயணஞ் செய்யவும் ஏனையோர் இருப்பதற்கு எங்கே இடம என்று தேடியலைந்து வாடி நெடுந்தூரம் நின்ற நிலையிற் பயணஞ்செய்யவும் போக்குவரத்துச் சேவையிருப்பது முறையாகாது. பணங் கொடுக்கின்றவர்களின் உளம நோக அதிகாரிகள் இதைப்பற்றி ஒரு மாற்றமும் செய்யாமல் இருப்பது நெறியாகுமா? பொதுவாகப் பகலில் ஓடும் கடுகதி வண்டிகளிலே வகுப்புப் பிரிவு வேண்டியதில்லையே! அவ்வாறிருப்பினும் இரண்டு வகுப்புகள் இருந்தால் போதுமே.

வழமையாகப் பயணஞ் செய்வோர் வட பகுதிச் சேவையைப்பற்றி பலவிதமாக முறையிடுகின்றனர். மேலதிகாரிகளுக்கு விண்ணப்பஞ் செய்கின்றனர். ஆனாற் பயன் எள்ளளவுமில்லை. எந்தநாளும இடமில்லாத நெருக்கடிஎன்றால் இதன் கருத்தென்ன? கோயில்களுக்கு யாத்திரை செய்பவர்கள், பள்ளிக்கூட நிகழ்ச்சிகளுக்குச் செல்லும மாணக்கர் ஆசிரியர் என்று எவ்வகையிலும ஒவ்வொரு நாளும் ஒரு தனிககாரணம பற்றிப் பயணக் கூட்டம் கூடுதலாக இருப்பது வழக்கம. அதற்குரிய வருவாயை நிதிக் குவியலிற் சேர்க்கும் அரசினர் அதைப் பெற்றுவிட்டாற்போதுமென[illegible]பது சற்றும் நியாய[illegible]

—

## ஸ்ரீ அம்பலவாண நாவலன்புகழ் பகர்ந்திடல் எளிதாமோ?

*

[ பண்டித த. சுப்பிரமணியம் ]

இராகம் : ஹம்ஸத்வனி :: தாளம் : ஆதி

பல்லவி

பாரினில் அம்பல வாணன் புகழினைப்
பகர்ந்திடல் எளிதாமோ? — எம்மாலே (பா)

அநுபல்லவி

ஆரியஞ் செந்தமி ழாங்கரை கண்டவன்
அறுமுக நாவலன் அடிதுணை கொண்டவன் (பா)

சரணம்

சீரிய சைவசித் தாந்த நெறிகாட்டி
சிறுமதப் புன்னெறி தமையெலாம் வீட்டி
வீறியல் நாவலன் வழிவழி நாட்டி
விளங்கிடு மவன்சீ ரிதுவெனத் தீட்டி (பா)

# நீராவியடி குருக்கள் மடம்

யாழ்ப்பாணத்திலே சைவ மக்களுடைய சைவ சமய அறிவும், ஒழுக்கமும் விருத்தியடையச் செய்தற்கு நீராவியடி குருக்கள்மடம பன்னெடுங் காலமாக உதவிவந்தமையை யாவரும் அறிவர். இம்மடம் ஏறத்தாழ 300 வருடங்களுக்கு முன் தாபிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது, குறித்த மடத்தில் காலந்தோறும் வசித்துச் சைவதொண்டுபுரிந்தவர்கள் வேதாரணியத்திலேயுள்ள பரம்பரையான சைவாசாரிய குடும்பங்களில் தோன்றிய சைவக்குருமார்களாகும்.

வேதாரணியம் பாரதநாட்டிலுள்ள சிவாலயங்களுக்குள் தலைமைபெற்றது, திருமறைக்காடு, வேதபுரி, வேதவனம் என்பன இத்தலத்தின் மறுபெயர்கள. இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களாலும் இத்தலம் பூசிக்கப்பட்டது. தேவாரம் ஓதிய மூவராலும் இத்தலம் பாடப்பெற்றுள்ளது; வேதங்களால் அடைக்கப்பட்ட திருக்கதவினைத் திருநாவுக்கரசுநாயனார் திறக்கப் பாடினார், பின்பு அதனை திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அடைக்கப்பாடினார். வேதநதி, வேதாமிர்தம், மணிகர்ணிகை, ஆதிசேது முதலிய புண்ணிய தீர்த்தங்கள் இத்தலத்தைச் சூழ்ந்திருக்கின்றன; மேலே கூறப்பட்ட குருக்கள்மாருடைய சேவையினால் வேதாரணியத்துக்கும் ஈழநாட்டுக்கும் தெய்வீகத் தொடர்பு ஏற்பட்டிருந்தது வேதாரணியத்திலும் யாழ்ப்பாணத்திலும் வசிக்கின்ற மக்களுக்கு சமயக் கலாச்சாரம் சம்பந்தமான தொடர்பு வலிமைபெற்றிருந்தது.

இலங்கை சுதந்திரமடைந்த பின்பு ஈழநாட்டு மக்கள் பாரதநாட்டுடன் வைத்திருந்த தொடர்புகள் விரைவாகக் குன்றிவருகின்றன. இந்தியாவிலிருந்து இங்கு வந்து தொண்டு புரிபவர்களுக்கு விஸா வழங்குதல் மறுக்கப்பட்ட காரணத்தினால் குறித்த குருக்கள் மடத்திற்குரிய குருக்கள்மார்கள் இங்கு வருவதை நிறுத்திவிட்டார்கள்.

இம்மடத்தில் கடைசியாகத் தொண்டாற்றியவர்கள் ஸ்ரீமத் ந சோமசுந்தரக்குருக்களும் அவருடைய சகோதரன் ஸ்ரீமத். ந. வைத்தியநாதக் குருக்களுமாவார்கள். [illegible] தை விற்பனை செய்து விட்டார்கள். குருக்கள் மடமும் அகற்றப்பட்டது, ஸ்ரீமத். ந. சோமசுந்தரக்குருக்களும், ஸ்ரீமத். ந. வைத்தியநாதக் குருக்களதும் பாகத்தை விலைக்குப் பெற்ற திரு. வை. இரகுநாதமுதலியாரும் அவருடைய தாயாரும் அப்பாகத்தில் ஒருபரப்பு இரண்டரைக்குழி நிலத்தை ஒரு குருக்கள் மடம அமைத்து அதில மேற் கூறிய குருக்கள் வம்சத்தைச் சேர்ந்த ஒருவரைக் குடியிருத்துதற்காகச் சைவ பரிபான சபைக்கு நன்கொடையாக அளித்திருக்கின்றார்கள்.

இந்நன்கொடை நிலத்தில் ஒரு மடத்தை நிறுவி வேதாரணியம் ஸ்ரீமத், வே. தியாகராசக்குருக்கள் அவர்களை அதில் குடியிருக்கச் செய்வதற்கு சைவபரிபாலன சபையார் தீர்மானித்திருக்கின்றார்கள், ஸ்ரீமத். வே தியாகராசக்குருக்கள் பரம்பரையாக அம்மடத்தில் சேவைபுரிந்து வந்த ஸ்ரீமத். ந. சோமசுந்தரக் குருக்களுடைய மாணக்கரும் உறவினருமாவர். வடமொழி தமிழ் ஆகிய இருமொழிகளும் நன்கு கற்றவர். ஆகம சாத்திரங்களிலும் கிரியாபாகங்களிலும் சோதிடத்திலும் விற்பத்தியுடையவர். இயம நியமங்கள் சிவபூசை முதலியன கிரமமாகப் புரிகின்றவர். இக்குருக்கள் வருகிற 14-9-63 சனிக்கிழமை மேற்படி புதுக் குருக்கள் மடத்திற்குக் குடியிருக்க வருகின்றார். இவருடைய வருகையினால் நீராவிக் குருக்கள்மடம் பழமையான கீர்த்தியையும் நன்மதிப்பையும் பெறுமென எதிர்பார்க்கின்றோம்.

—

நேயர்கள் நெஞ்சம்

## தன் மொழியை, சமயத்தைப் பேணுவதே மானம்

தமிழ் மக்கள் தமிழ்ப்பற்றுடையவராக இருந்தால் யாரும் எதிர்த்து வெற்றி பெறமாட்டார்கள். தமிழ மக்களின் சைவ சமயக் கொள்கை, அறிஞர்களின் மதிப்புப்பெற்றது. சைவ சமயசாரமான கட்டுரைகளை வெளியிடும் ஒரு "இந்துசாதனம்" என்ற பத்திரிகையை எத்தனை தமிழர்கள் படிக்கிறார்கள். வயது எழுபத்தைந்தான பனிதரைப் புறக்கணிப்பது போலச் சைவத்திருவுடையார் வயசு எழுபத்தைந்தான சைவப் பத்திரிகையை ஒதுக்கிவிட்டு, ஆங்கிலத்தில் வரும் இலங்கைப் பத்திராகைகளையும், சென்னை இந்துப் பத்திரிகையையும் மிக்க ஆர்வமாகப் படிக்கிறார்கள். "பெற்ற தாய் பசித்திருப்பத் தம்பி கும்பகோணத்தில் பிராம்மண போசனம் நடத்தினான்" என்பதுபோலிருக்கிறதல்லவா? மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் எட்வேட் நோர்மன் என்ற கனவான் தலைமைவகித்துத் தமிழில் பேசினார். மிஸ்டர் டாப்பிளி என்ற துரை மாணிக்கவாசகரைப்பற்றி அரிய பிரசங்கம் தமிழில் செய்தார். எவர் எப்படிச் செய்தாலென்ன? நாங்கள் அசையமாட்டோம் என்பது அபிமானக்குறைவேயாகும். ஒவ்வொரு சமூகத்தவரும் பெற்ற தாய்போல் மொழியையும், நாட்டையும் மதிக்க, தமிழ்ப்பெருமக்கள் தமிழைக் கல்லாதும், சிறிது கற்றோர் முற்றக்கற்றவராகக் கருதிப் பிழைபட எழுதியும் வாழ்நாளை வீணாக்குவது நன்றன்று. "கற்றல் கேட்டலுடையார் பெரியார்" என்பது முத்தமிழ் விரகரின் உத்தம உபதேசமன்றோ! தமிழ் பேசும் மக்கள் ஓரே சமூகம் என்று ஒன்றுகூடி வாழ்ந்தால் யாவும் இனிது நிறைவுறும்.

வ. மு. இரத்தினேசுவரஐயர்
10-9-63.

x x x

## புதுமையல்ல

இந்துசாதனம் 23-8-63 இதழில் மெய் எழுத்துக்கள் விரவாத பாக்கள் பாடிய புலவர்மணி திரு. சி. சின்னையா அவர்களைக் கௌரவிப்பது அறிஞர் கடமை. 4000 ஆண்டுகளுக்குள் இப்படிப் பாடியவர் எவருமே இல்லை என்று தமிழ் அறிஞர்கள் கூறுகின்றார்கள் என்கிறீர்கள் எங்கள் ஞானப்பாலுண்ட தெய்வக் குழந்தை ஸ்ரீ. ஞானசம்பந்தசுவாமிகள் 7-ம் நூற்றாண்டில் சீகாழியில் மெய்யெழுத்துக்கள் விரவா வண்ணம் திருவாய் மலர்ந்திருக்கின்றார்கள். அடங்கன் முறையில் பார்க்கலாம்.

"யாமாமாநீயாமாமா
யாழிகாமாகாணகா
காணகாமாகாழியா
மாமாயாநீமாமாயா"

சி. சேதுகாவலபிள்ளை,
சுழிபுரம்.

## நல்லூர் திருக்கேதீச்சரம் நடை பஜனை

எதிர்வரும் புதன்கிழமை 25 9-63 மாலை 5-30 மணியளவில் நல்லூரிலிருந்து திருக்கேதீச்சரத்திற்கு அடியார்களுடைய நேர்த்திகளுடன், பக்தர்களின் நாம பஜனைக் கூட்டம் பூநகரிக்கூடாக கால் நடையாகச் செல்வதற்குத் திருவருள் பாலித்திருக்கின்றது.

நல்லூரிலிருந்து புதன் கிழமை மாலை 5 30 மணிக்குப் புறப்படும் பஜனை திருக்கேதீச்சரத்திற்கு அடுத்து வரும் 30-9-63 திங்கட்கிழமை பிரதோஷ விரத உற்சவத்தன்று போய்ச் சேர்ந்து, அடுத்த நாள நடேசரபிஷேக வைபவத்திலும் கலந்து கொள்ளும்.

—

## சகுந்தலை வெண்பா

திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தமிழில் மொழிபெயர்த்துள்ள சகுந்தலை வெண்பா அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் நாளை வெளியீட்டுவிழாக் காண இருக்கிறது. இவ்விழாவில் பல அறிஞர்கள் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவதிகை - மனவாசகங்கடந்தார்
அருளிச்செய்த

# உண்மை விளக்கம்

மூலமும் உரையும்

[சித்தாந்த பண்டிதர், சைவப்புலவர் இ. செல்லத்துரை]

(முற்றொடர் - 26)

வாழ்ந்தே னருட்கடலே வற்றுப் பவக்கடலில்
வீழ்ந்தே யலையாமல் மேதினியில் — சூழ்ந்துவிடா
வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே
யுண்மைத் தவப்பயனே யுற்று. 53.

கொ—கூ.— (தரிசித்த மெய்யடியார்கள்) சூழ்ந்து விடா வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே, உண்மைத் தவப்பயனே, அருட்கடலே, (அடியேன்) வற்றுப் பவக்கடலில் வீழ்ந்து (+ஏ) மேதினியில் அலையாமல் (முத்தி யளிக்கும் உமது திருவடியை) உற்று வாழ்ந்தேன்.

ப—ரை:— சூழ்ந்து விடா வெண்ணெய்ச் சுவேதவன மெய்கண்ட நாதனே - தரிசித்த மெய்யடியார்கள் சூழ்ந்து (பின்னர்) விட்டு நீங்காதபடி திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளியிருக்கும் சுவேதவனப் பெருமாள் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்ட நாதனே, உண்மைத் தவப்பயனே-மெய்த்தவம் உடையவர் தம் தவத்தின் பயனை அடைதற்கு உரியவனே, அருட்கடலே - கிருபாசமுத்திரமே, வற்றுப் பவக்கடலில் வீழ்ந்து (+ஏ) மேதினியில் அலையாமல் உற்று வாழ்ந்தேன் - அடியேன் குறைவுபடாத பிறவியாகிய சமுத்திரத்தில் அழுந்தி உலக வாழ்வில் (மயங்கிச்) சீரழிந்து துன்புறுமல், தேவரீரது திருவடியை (அடைந்து) பற்றி நின்று பேரின்பவாழ்வெய்தினேன்.

ஏ - அசை. இந்நாலுட் காட்டிய உண்மைகளை மெய் கண்டதேவ நாயனர் உபதேசித்தருளினராக, அதனைத் தந் தவப்பயனுய்க்கேட்டு உய்ந்த திருவதிகை மனவாசகங் கடந்தார் ஆனந்த பரவசத்தராய் இங்ஙனம் நன்றியறிதலோடு துதித்தனரென்க. உண்மைச் சரியை கிரியை யோகம் ஆகிய சிவபுண்ணியங்களே 'மெய்த்தவம்' என்பதும். அத்தவவி சேடங் காரணமாக ஞானசாரியரது தரிசனம் உளதாகும் என்பதும், அவ் ஆசாரியரது அநுக்கிரகத்தாலே அவரது தீட்சைக்கிரமங்களினலே பதிஞானம் பெறற்பாலதென்ப தும், அங்ஙனம் பெற்ற பதிஞானத்தாலேயே பரமுத்தியா கிய பேரின்பவாழ்வெய்தலாமென்பதும் (ஆசாரிய வணக்கங் கூறும்) இச்செய்யுளானறியக்கிடந்தமையுணர்க

பொழிப்பு:— தரிசித்த மெய்யடியார்கள் சூழ்ந்து விட்டு நீங்காதபடி திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளிய சுவே தவனப் பெருமாளென்னும் மெய்கண்டதேவரே, தவத்தின் பயனை அடைதற்குரியவரே, கிருபாசமுத்திரமே, நான் பிறவிக்கடலில் அழுந்தி உலக வாழ்வில் மயங்கித் துன்புறு மல் தேவரீரது திருவடியைப்பற்றி நின்று பேரின்பவாழ் வெய்தினேன்,

மன்னதிகை வாழும் மனவா சகங்கடந்தான்
மின்னனையார் வாழ்விலரு மேய்கண்டான் — பன்மறைகள்
வண்மைதரும் ஆகமநூல் வைத்த போருள் வழுவா
வுண்மைவிளக் கஞ்சேய்தா னுற்று. 54.

கொ - கூ: மன் அதிகை வாழும் மனவாசகம் கடந் தான், மின் அனையார் வாழ்வில் உறு மெய்கண்டான் (திரு வடிகளை) உற்று, பன்(னும்) மறைகள் வண்மை தரும் ஆகம நூல் வைத்த பொருள் வழுவா(+த) உண்மை விளக்கம் செய்தான்

ப-ரை: மன் அதிகை வாழும் மன வாசகம் கடந் தான் - (பல வளங்களாலும்) தலைமைப்பாடுடைய திருவ திகை என்னும் பதியில் எழுந்தருளிய மனவாசகம் கடந்த தேவ நாயனர், மின் அனையார் வாழ்வில் உறு மெய்கண் டான் உற்று - மின்னலை யொப்பப் பிறந்தும் இறந்தும் உழலும் பெத்தான்மாக்களது உலக வாழ்வில் பொருந்தி யில்லாத மெய்கண்ட தேவநாயனரது திருவடிகளை (மனம் மொழி மெய்களினல் துதித்து)ச் சேர்ந்து நின்று, பன் மறைகள் வண்மை தரும் ஆகம நூல் வைத்த பொருள் வழுவா(+த) — சிறப்பித்துக் கூறப்படுகின்ற வேதாந்த (-ஞான காண்டத்து) வளத்தை வகுத்து உரைப்பனவாகிய சிவாகமங்களிலே உள்ள பொருளியல்புகளுக்கு மாறு படாத, உண்மை விளக்கம் செய்தான்' - (இவ்) 'உண்மை விளக்கம் என்னும் மெய்கண்ட சாத்திர நூலை அருளிச் செய்தார்.

காப்புச் செய்யுளில் "வண்மைதரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்" எனத் தொடங்கிய ஆசிரியர் நூலை முடிக்கும் இவ்விடத்தும் அங்ஙனமே "வண்மை தரும் ஆகமநூல் வைத்த பொருள் வழுவா உண்மை விளக்கம்" எனக் கூறுமுகத்தால், இந் நூலுட் கூறப்பட்டன எல்லாம் சிவாகமங்களுட் காணப்பட்ட உண்மைகளே என வலியுறுத்தினரென்க.

திருஞானசம்பந்த நாயனரவர்கள் தமது தேவாரத் திருமுறையிலே (பதிக இறுதிதோறும்) வரும் திருக்கடை காப்பில் தமது பெயரைக் குறிப்பிட்டுள்ளார். அங்ஙனமே இச் செய்யுளும் அமைதலின் இது இந் நூலுக்கொரு கடைகாப்பாகக் கொள்ளத்தக்கது.

பொழிப்பு: திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனர் (பெத்த நிலைப்படும் உலகத்தாரது வாழ்விற் பொருந்தாத) மெய் கண்டதேவநாயனரது திருவடிகளைப்பற்றி நின்று வேதாந்த சிவாக மங்களிலே சொல்லப்பட்ட உண்மைகளுக்கு மாறுபாடில்லாத (இவ்) "உண்மை விளக்கம்" என்னும் சித்தாந்தநூலை அருளிச்செய்தார்.

"உண்மை விளக்கம்" புத்துரை முற்றிற்று,

திருவதிகை மனவாசகங்கடந்த தேவநாயனர் திருவடி வாழ்க.

திருவெண்ணெய் நல்லூர் மெய்கண்டதேவநாயனர்
திருவடி வாழ்க.

திருச்சிற்றம்பலம்.

நல்லைக்கீர்த்தனம் — 45.

## எந்தன் 'சஞ்சலம்' தீரானே?

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம் : பாகேஸ்ரீ : தாளம் : ஆதி

பல்லவி

நெஞ்சம் அறியானே நீ சொல்லடி — சகியே
தஞ்சம்என்றே முருகன் தாளைவணங்கும் எந்தன் (நெ)

அனுபல்லவி

அஞ்சலென்றே அபயம்அருளும் சண்முகன் எந்தன்
சஞ்சலம் தீரானே? வந்தெனைப் பாரானே? (நெ)

சரணம்

நல்லைநகர் வளரும் நாதன்முருகன் எந்தன்
தொல்லைகள் தீர்ப்பானே? தோகை மயிலழகன் (நெ)
தில்லைச்சிவன் குமரன் திரண்ட புஜத்தழகன்
எல்லையில்லாத அருள் எழில்வேலனை நினைக்கும் (நெ)

## குலோத்துங்கசோழன் கட்டுவித்த கோயிலில் கும்பாபிடேகம்

—0—

[இந்துசாதன அபிமான நிருபர்,
திரு. மா பாலசுப்பிரமணியன், சிதம்பரம்]

சிதம்பரம், ஆவணி 22. திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனத்து 25-வது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ. கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ. அறம் வளர்த்த நாயகி சமேத ஸ்ரீ. கம்பஹரேஸ்வர சுவாமி (நடுக்கம் தீர்த்த இறைவன்) தேவஸ்தானத்தைப் பெரும்பொருட் திட்டத்தில் வெகு அழகான முறையில் ஜீரணோத்தாரணம் செய்து 21-ம தேதி விடியற்காலை அஷ்டபந்தன மகா கும்பாபி ஷேகத்தைச் சிறந்த முறையில் நடத்தி வைத்தார்கள். 20000 மக்கள் வந்து கூடித் தரிசனம் செய்தார்கள்.


தமிழக அரசு அறநிலைய ஆணையாளர் ஸ்ரீ. சாரங்க பாணி முதலியார் கோவிலில் கலைக்கூடத்தைத் திறந்து வைத்தார்,

அறநிலைய அமைச்சர் ஸ்ரீ. எம். பக்தவத்சலம் கும்பாபி ஷேக மலரை வெளியிட்டார். மூன்று நாளும் சிவபூசகர்கள் மகாநாடும், பன்னிரு திருமுறை மகாநாடும், வேத திருமுறைப் பாராயணங்களும வெகு சிறப்பான முறையில் நடைபெற்றன,

3-வது குலோத்துங்க சோழ மன்னன் யுத்தத்தின் வெற்றியின் காரணமாக இக்கோவிலைக் கட்டியுள்ளான். ஸ்ரீ கம்பஹரேஸ்வரரின் கர்ப்ப கிரகம் அடித்தளத்திலிருந்து மேல் கலசம்வரை 116 அடி உயரம் கருங்கல்லினலேயே விமானம்கட்டப்பட்டுள்ளது,

இந்தத் திருக்கோவிலில ஸ்ரீ. சரபேஸ்வரமூர்த்தி பிரதான மூர்த்தியாகக் காட்சி அளித்துக்கொண்டு வருகின்றார்.

ஸ்ரீலஸ்ரீ. கயிலை மகாசந்நிதானம் அவர்களின் அருளாட்சியில் ஆதீனத்திற்குச் சொந்தமான 27 தேவஸ்தானங்களில் 25 தேவஸ்தானங்கள் வெகு அழகான முறையில் ஜீரணோத்தாரணங்கள் நடைபெற்று மகா கும்பாபிஷேகங்கள் சிறந்த முறையில் நடத்தி வைத்திருக்கின்றார்கள்.




## பாரதி விழாக் கவியரங்கு

எதிர்வரும் 15-9-63 புதன் கிழமை பிற்பகல் செங்குந்தா இந்துக்கல்லூரி உயர்வகுப்பு மாணவர் மன்ற ஆதரவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் மகாகவி பாரதியார் நினைவுவிழாக் கொண்டாடப் பட இருக்கிறது. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் சொற்பொழிவும், கவிஞர் விடிவெள்ளி அவர்கள் தலைமையில் "சேமமுற வேண்டுமெனில்" என்ற தலையங்கத்தில் யாழ்ப்பாணக் கவிஞர்கள் நால்வர் பங்குபற்றும கவியரங்கொன்றும் நடைபெறும்.

x x x

## பாரதி விழா

நாளை சனிக்கிழமை கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மண்டபத்தில் பாரதிவிழாஒன்று கொண்டாடப்பட இருக்கிறது. அவ்விழாவில் பலரின் சொற்பொழிவுகளும் நமக்குத் தொழில் கவிதை நாட்டுக்குழைத்தல்என்ற தலைப்பில் வித்துவான் சி. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் ஒரு கவியரங்கமும் நடைபெற இருக்கிறது.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4532.

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்

சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
1. க. தர்மபாலனும் மனைவி
2. மகேஸ்வரியும்
—வழக்காளிகள்.
எதிராக
புத்தூர் மேற்கு
1. சின்னத்தம்பி பெரியதம்பி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M,B. 4532-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1963-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19-ம் திகதி சனிக்கிழமை (19-10-63) முற்பகல் 10 மணி தொடக்கம் அக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2370. மேலும் ரூபா 2000-க்கும் 1-1-62 தொடக்கம் 3-7-62 வரையும் வருடமொன்றுக்கு 9% வீத வட்டியும் அதன் பின் கூடிய மூழுத்தொகைக்கும் வருடமொன்றுகக்கு 5%வீத வட்டியும் கொடுக்கும்வரையும் இறுக்க வேண்டும். கோட்டுச் செலவு ரூபா 192-92 சதம்.

ஆதனடாப்புக்கள்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர் கோவிற்பற்று புத்தூர் வடககிறை "நொச்சியடி" என்னும் காணி நில. பர, 8. இதில் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் மனைவி பராசத்தியினுதனம், வடக்கு இராமலிங்கம் குமாரசாமியின் மனைவி சின்னததங்கச்சியினுதனமும், மேற்கு முத்துககுமாரு காசிநாதர் கைம்பெண் கனகாம்பிகையினுதனம். தெற்கு கனகசபை மூத்துக்குமாருவினுதனம். இது முழுவதும் K 215/237.

2. ஷ கோவிற்பற்று ஆவரங்கால் இறை "மணிகந்தன் ஒல்லை" என்னும் காணி நில. பர 4, கிணறும், வேப்பமரமும் உண்டு. இதில் எல்லை கிழக்கு செல்விநாதர் கைலாயரினுதனம். வடக்கும், மேற்கும் சுப்பிரமணியம் சடாசிவத்துக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதில் சொரியலாய் அரைவாசிப்பங்கு. K 133/199.

இ. கனகரெத்தினம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
நம்-35 கொழும்புத்துறைவீதி
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
M 132 13-8-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிராபுரிக் காவலனே!

மெய்யெழுத்துக்க ளில்லாத
கட்டளைக் கலித்துறைகள்

[ ஆசிரியர் திரு. சி. சின்னையா அவர்கள், கச்சாய் ]

அறமே பகரு மவரோ வுலகி லருமைமிகு
புறமே பகரு மவரோ மலிவு பொருமவுண
திறமே யழிய விடுவே லிறைவ செகமுதவு
மிறைவா கதிரை முருகா கருணை யினிதருளே. (8)

மகமே புரிவ தறவே தவிர வருகலியி
னுகமே முனிவ ருரையே தருவ ருலகிலறி
வகமீ தருமை வருவா ருயிரை யடுவரிது
நகமே கதிரை யிறைவா வுணரு நயமருளே. (9)

வேறு சந்தம்

வாமன னுயொரு பேருரு வாகிய மாயவனு
லேமுன மோரடி யாகிய பூகல மீரடியா
லாமினி தாகிய பேரரு ளீமுரு காவமலா
காமக னுகமெ லாநட மாடிய காவலனே. 10

சீருரு வாயர னேருறு மாறது தீவினையா
னீருவ கேயரி தாதலி னீசனி சாசரரே
நேருறு வோசிறை யேதென நீளுரை பேசிவரு
வாரிறை வாகதி ராபுரி வாழுறு மாமுகனே. 11.

வேறு

அரிதான தேவை வருபோத தயலி லவரிடமே
யிருமா விதியுறு மேது முதவி யிழையவரா
வருமே லிவர திடரேகு மேக வராகியதி
கருமேவு தீவினை போமோ வெளிது கதிரையனே. 12.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M B 4502

திருநெல்வேலி கிழக்கு
கார்த்திகேசு அருணாசலம்
இராமலிங்கம் —வழக்காளி.

எதிராக

நல்லூர்
1. கிருஷ்ணபிள்ளை துரைசிங்கம்
திருநெல்வேலி கிழக்கு
2. சங்கரப்பிள்ளை
செல்வரத்தினமும் பெண்
3. தங்கரத்தினமும்
4 சரவணமுத்து கந்தையாவும்
பெண் 5. யோகம்மாவும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 4502 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் 2 துண்டுக் காணிகளை 1963 ம் ஞு ஐப்பசி மீ 5 ம் உ சனிக்கிழமை மூற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் வின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை முதல்வட்டி ரூபா 4400 ம் 15-3-62 தொடக்கம் 23-7-62 வரைக்கும் ரூபா 2500 க்கு 8 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும்கோட்டுச் செலவு ரூபா 278-87 ம்.

ஆதன விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை சங்கிலிதோப்பு நில. பர — குழி $11\frac{3}{4}$ வீடும் பயிர்வகைகளும் மேற்கே யிருக்கும் கிணற்றிற் பங்கும், தூர்வைட் பங்கும் வடக்கேயிருக்கும் 6அடி அகலங்கொண்ட ஒழுக்கை உரித்தும். குறித்த ஒழுங்கையில் நிற்கும் தென்னைகளில் கிணற்றடியில் நிற்கும் தென்னை ஒன்றும் நடுவில் நிற்கும் தென்னைகளிரண்டும். இந்தக் குளி பதினொன்றே முக்காலுக்கும் எல்லை வடக்கும் தெற்கும் மேற்கும் சண்முகம் கைம்பெண் இராசம்மாவுக்கும் மகன் அரசபிள்ளைக்குமுரியகாணி. கிழக்கு ரோட்டு. இதில் குறித்த ஒழுங்கையில் கிழக்கடைய நிற்கும் மூன்று தென்னைகள் புறநீங்கலாக. இவ் விபர முடைய காணியடங்கலும் அதற்குரியவைகளும்.

2. ஷை இறை காக்கையன்வளவும் பிள்ளையான் வளவும் நில. பர 25/8 வீடும் கிணற்றுப்பங்கும் பயிர்வகைகளும், இப்பரப்பு இரண்டொடு எட்டில் ஐந்துக்கும் எல்லை வடக்கு சுந்தரம் சண்முகத்துக்கும் சகோதரிக்கு முரிய காணி. கிழக்கு இரத்தினசபாபதி பெண் தில்லைவனத் துக்குரிய காணி. தெற்குஒழுங்கை. மேற்கு கதிர்காமர் பெண் ஆழ்வாத்தையின் காணி, இவ் விபரமுடைய காணியிலும் அத னுரித்துக்கள் சகலதிலும் சொரியலாய் ½ அரைவாசி.

அ. வெற்றிவேலு
கொமிஷனர்.
19, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம், 9-9-63.
M. 134 13-9-63.


# எஃப். ஜீவாஜி சகோதரர்கள்

## மொத்த, சில்லறை வியாபாரிகள்

அச்சுக்கந்தோர்களுக்கும், பாடசாலைகளுக்கும் தேவையான கடிதம், அச்சடிக்கும் மைகள், பாடசாலை உபகரணங்கள், பாண்சாலைகளுக்கான 'கேக்' பெட்டிகள், கடுதாசிப்பைகள், வியாபாரிகளுக்கான என்வலப்புகள், நூல், மை, கொப்பி, பென்சில், பேனை, பலவித மட்டைகள், சோடனைக்கடுதாசிகள் என்பன எம்மிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிந்த விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எஃப். ஜீவாஜி சகோதரர்கள்,
ஜுபிலி பஜார், இலக்கம் 9, (ராணி சினிமாவுக்கருகில்)
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தலைமைக்காரியாலயம்:
ஜீவாஜி சகோதரர்கள்,
50. புதிய சோனகதெரு கொழும்பு-12

கிளை:
இண்டிப்பெண்டன் ரேடிங்கொம்பனி,
51A, 1-ம் குறுக்குத்தெரு
கொழும்பு — 11.

தொழிற்சாலை: 146, புதிய சோனகத்தெரு, கொழும்பு 12



யாழ்ப்பாணம்

# — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.


இவ்வாரம் 15-9-63 — 21-9-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

மன அமைதி இருக்காது. வேலை வழமையிலும் அதிகமாயிருக்கும். எதிரிகளை வெல்வது நிச்சயம். நண்பர்கள் மிக உதவுவர்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

புது முயற்சிகளுக்கு ஏற்ற வாரம். எதிரிகளுககு இடரும் உமக்குப் புகழும் நிச்சயம் தர்தை வழி உறவினர் தொல்லைதருவர். சிறு உடல் நிலைக் குழப்பங்கள் உண்டாம்,

**மிதுனராசி** மிருகசீரிடம், 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

உடல்நிலை திருப்தியாயிருக்காது. மன நிம்மதியிருக்காது. புது முயற்சிகள் எச்சரிக்கையோடு மேற்கொள்ளப்பட வேண்டும். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

இனத்தவருடன் மோதலுக்கு இடமுண்டு குடும்ப நிலைமையும் திருப்தியாயிருக்காது, பண இலாபம் நிச்சயம். போட்டியிடுவோரை வெற்றிகொள்வீர்.

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

பெரும்பாலும் எல்லா அலுவல்களிலும் எதிர்ப்புக்கள் வரும் ஆனாலும் அவற்றை நீர் தாண்டிவிடுவீர், நிம்மதி இருக்காது. தூற்றித்திரிவோர் குழப்பம் தருவர். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உமது சில சொந்தப் பிரச்சனைகள் தீர்வுறும். பணமளவில் நல்ல வாரம். உடல் நிலை திருந்த வேண்டும், ஆனால் சிறு கண் நோய் உண்டாம்,

**துலாம்**, சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

உடல்நிலை பிரச்சினையாகும் எண்ணம்போல் நீர் நடப்பதரிது. செலவுகள் பெருகும். புது முயற்சிகள் சுணக்கமுறும்.

**விருட்சிகராசி** விசாகம் 4.ம் பாதம் அநுஷம், கேட்டை.

விவசாயத்தில் வெற்றி நிச்சயம். பண வருமானமும் புகழும் ஏற்படும். சிறு உடல் நிலைக் கோளாறுகள் ஏற்படலாம். கண்நோய்கள் உண்டாம்,

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப நிலைமை திருப்தியாயிருக்காது, வார முதல் நாளை எச்சரிக்கையோடு கழிக்குக, புது முயற்சிகள் சுணக்கமுறும். ஆனல் வெற்றிபெறும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குழப்பமான வாரம். மன நிம்மதி இருக்காது. பெரும் எதிர்ப்புகள் உமது அலுவல்களில் ஏற்படும். ஆனல் அவற்றை நீர் தாண்டிவிடுவீர். ஞாயிறு மாலை திங்கள் செவ்வாய் எச்சரிக்கையோடு கழிக்குக.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

முதல்மூன்று நாட்களும் சாதகமானவை. பண இலாபமும் புகழும் நிச்சயம். புதன் வியாழன் வெள்ளி காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும். மிகுதி நாட்கள் சாதகமானவை,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

குடும்ப நிலைமை குழம்பலாக இருக்கும். உடல்நிலை ஊறுபடும். பணமளவில் ஓரளவு நல்லவாரம். வெள்ளி மாலையையும் சனியையும் எச்சரிக்கையோடு கழிக்குக.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக்கோட்டில்
அந்தியேசு டானியல்
அப்புத்துரை
ஈச்சமொட்டை ரோட்
சுண்டிக்குளி
—வழக்காளி.

வழ, இல. M.B. 4396.

எதிராக

நல்லூர்
1. மைக்கேல் யோசேவ்வும்
மனைவி
2. விக்டோரியா.
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4396-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1963-ம் ஞு அக்டோபர் மீ 12உ (12-10-63) சனிக்கிழமை மூற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:—முதல்வட்டி ரூபா 3650-ம். மேலும் 2500 ரூபாவுக்கும் 13 - 11 - 61 திகதி தொடக்கம் 8-2-62 திகதி வரைக்கும் வருடமொன்றுக்கு 12%வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வீத வட்டியும் இதில் கோட்டில் கட்டப்பட்ட ரூபா 500 குறைய. கோட்டுச் செலவும் ரூபா 247-95 சதமும் இதில் ரூபா 150/- குறைய

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோயிற்பற்று நல்லூர் இறை "காக்கையான் வளவு" நிலப்பரப்பு $1\frac{1}{2}$, மேற்கில் ஒழுங்கையிலிருந்து இந்தக்காணிக்குப் போய்வர கைஒழுங்கை உரித்தும், வடக்கெல்லைக காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் இதற்குப் போய்வர வழிவாய்க்கால் உரித்தும், மற்றும் இதற்குச் சேர்ந்த வைசளும். இதற்கு எல்லை கிழக்கு சுப்பையா மனைவி எமிலி முத்தம்மாவினுதனம். வடக்கு நல்லதம்பி மனைவி மாரிமுத்துவினுதனம், மேற்கு முன் குறிப்பிட்ட கை ஒழுங்கை முகப்பும் இந்தக்காணியின் மிகுதி ஆதனமும். தெற்கு ஆதனத்தின் மிகுதிப்பகுதியும் தம்பிமுத்து தம்புவினதும்.

வி. செ. குட்டிப்பிள்ளை,
கொமிஷனர்.
Auctioneer & Valuer,
613 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 130, 13-9-63,

## கோட்டு விற்பனவு விளம்பரம்

ஊரெழு
(1) வீரவாகு வயிரமுத்து
- வழக்காளி.

இல. M. B. 3446

எதிராக

உரும்பிராய்
(1) சின்னத்தம்பி நடராசா
(2) பெண் பொன்னம்மா
- எதிராளி.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M. B, 3446 ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுகாணி 1963ஞு ஐப்பசிமீ 19உ சனிக்கிழமை முற்பகல் 9½ மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல்ரூபா 1905/- இதில் ரூபா 1500 க்கு 22-6-1960 திகதி தொடக்கம் 26-7-1962 திகதி வரைக்கும் 9 வீத வட்டியும் பின்திகதி தொடக்கம் தீருபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 262-22 சதம்,

காணி விபரம்

கோப்பாய்க் கோவிற்பற்று கோப்பாய் தெற்குஇறை கேலப்பமும்நந்தியப்புலமும் நிலப்பரப்பு 10 கிழக்கு எல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்காலும். எல்லைகிழக்கு சின்னத்தம்பி நடராசாவுக்கும் பெண் பொன்னம்மாவுககுமுரிய ஆதனங்கள். வடக்கு செல்லப்பா பெண் ஆச்சிமுத்துவுக்குரிய ஆதனம். மேற்கு செல்லப்பா ஆச்சிமுத்துவுக்கும் மருதன் மூத்தானுக்கும் அமிர்தலிங்கம் சுப்பிரமணியத்துக்குமுரிய ஆதனங்கள், தெற்கு ஆறுமுகம் கதிர்காமுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனங்கள். இதடங்கலில் சொரியலாய் 5 நிலப்பரப்பும் அதற்குரிய கிணற்றுப் பங்கும் விற்கப்படும்.

ந. ஆறுமுகம்
கொமிசனரும் விலைமதிப்பாளரும்
சித்தங்கேணி,
9-9-1963.
M 131 13-9-63.


யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 13-9-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org